240

# காந்தி யார்?



OFFICE OF THE REGISTRAR ...
17 NOV 1943
MADRAS

வெ. சாமிநாத சர்மா

நுஎ
N43
00174

தமிழ்ப் பண்ணை

தமிழ்ப் பண்ணை மலர் 3

OFFICE OF THE REGISTRAR OF ...
17 NOV 1943
MADRAS

# காந்தி யார்?

lot

வெ. சாமிநாத சர்மா

தமிழ்ப் பண்ணை
தியாகராயநகர் — சென்னை

முதற் பதிப்பு மே 1943

94623

திரு
31 N43

TAMIL NADU ARCHIVES LIBRARY
No. 100174
MADRAS-600 008

சகல உரிமைகளும்
தமிழ்ப் பண்ணை யாளர்களுக்கே

M. I. P. PROJECT
Microfilmed.

விலை அணா எட்டு

சென்னை
கமர்ஷியல் பிரின்டிங் அன் பப்ளிஷிங் ஹௌஸில்
அச்சிடப் பெற்றது

M. I. P. PROJECT
Microfilmed.

# பதிப்புரை

இரங்கூனில் சிறந்த முறையில் நடந்துவந்த 'ஜோதி' பத்திரிகையின் ஆசிரியர் சர்மாஜி, தமிழனின் சிந்தனையைக் கிளரும் பல தலையங்கங்களை அதில் எழுதி வந்தார்கள். அவைகளில் ஒன்றுதான் இந்த நூல். நிறைந்த படிப்பும், ஆழ்ந்த சிந்தனையும் உள்ளவர் சர்மாஜி. எந்தப் பொருள் குறித்தும், எந்தத் தலைவரைப் பற்றியும் தாமே சிந்தித்து, தம் சொந்த அபிப்பிராயத்தையே திடமாய் வெளியிடும் தீரர்.

1914-ஆம் ஆண்டு முதல் இன்றுவரை 34 அரிய நூல்களை எழுதி யிருக்கிறார்கள். தம் வாழ்க்கையையே இந்திய சரித்திரத்தின் ஒரு பாகமாகச் செய்து, இன்று உலகத்திலே தனிப் பெரும் தலைவராக விளங்கும் காந்தி யார் என்ற கேள்வி விசித்திரமாகத் தோன்றும். ஆனால், சர்மாஜி சொல்லும் பதிலுக்குமுன், அந்தக் கேள்வியைக் கேட்டுத்தான் ஆகவேண்டும். 'காந்தி யார்?' அந்த உத்தமனை நாம் சரியாகப் புரிந்து கொண்டோமா? நாம் ஒவ்வொருவரும் நம்மையே கேட்டுக்கொள்ள வேண்டிய கேள்வி இது.

தமிழன் தீவிரமாய்ச் சிந்திக்க வேண்டும்; பற் பல பொருள் குறித்தும் சுயமாய் யோசிக்க வேண்டும். அதற்குத் தூண்டுகோல் போன்றது இம்

மாதிரிப் புத்தகங்கள். இது போல் பல நூல்கள் வெளியிட ஆசை.

தமிழன் சிந்திக்கத் தொடங்குவதே எங்கள் முயற்சியின் வெற்றி. அந்த வெற்றி நோக்குடனே, தமிழர்களின் கையில் இதைக் கொடுக்கிறோம்.

சென்னை
20–5–'43

தமிழ்ப் பண்ணையாளர்கள்

# காந்தி யார்?

எழுபத்திரண்டு சதுர மைல் விஸ்தீரணமுள்ள வாழ்க்கை யென்னும் யுத்த மைதானத்தில், அன்பு, அஞ்சாமை என்ற இரண்டு ஆயுதங்கள் தரித்துக் கொண்டு, முகத்திலே புன்சிரிப்புத் தவழ, கம்பீர மாகத் தலை நிமிர்ந்து நிற்கிற ஒரு போர் வீரனைக் காட்சி யளிக்கிருர் காந்தியடிகள் இன்று நமக்கு. இந்த எழுபத்திரண்டு வருஷகாலத்தில் * அவர் எத்தனையோ போர்களை நடத்தியிருக்கிருர்; எத்தனையோ பேரைத் தாக்கி யிருக்கிருர்; எத்தனையோ பேரால் தாக்கப்பட்டு மிருக்கிருர். ஆனால், அவர் தமது முகத்தில் சலிப்புக் காட்டியதோ, அகத்தில் வன்மம் கொண்டதோ கிடையாது. யுத்தத்தில் சகஜமாக ஏற்படக் கூடிய அநேக காயங்களை அவர் பட்டிருக்கிருர். ஆனால், எல்லாம் மார்பிலேதான். அவருடைய முதுகிலே ஒரு வடுவைக் கூடக் காண முடியாது. அப்படியே, எதிரிகளைத் தாக்குகிறபோதும், அவர்களுடைய மார்பிலேதான் காயமுண்டு பண்ணினரே தவிர, அவர்களுடைய முதுகுப்பக்கம் ஓர் அடி கூடக் கொடுத்ததில்லை. மற்றும், சத்துருக்களின் தனிமையையோ, அசதியையோ, அசட்டு அகங்கா

---

* 1941-ஆம் ஞு அக்டோபர் மாதம் எழுதியது.

ரத்தையோ அவர், தமது வெற்றிக்குச் சாதகமாக உபயோகித்துக் கொண்டதில்லை. எதிரிகளுடைய பல ஹீனத்தின் மீது வெற்றிக் கொடி நாட்டி விடக்கூடிய சந்தர்ப்பங்கள் எத்தனையோ அவருக்குக் கிடைத்தன. ஆனால், அவர் சந்தர்ப்பவாதியாக இருக்கவில்லை; இருக்க மறுத்து விட்டார். ஒரு யுத்த வீரனுடைய லட்சணத்தினின்று அணுவளவு பிறழவும் அவர் சம்மதிக்கவில்லை. இப்படிப்பட்ட யுத்த வீரனாகிய அவர், இன்று, தமது ஜீவன யாத்திரையின் எழுபத்து மூன்ருவது மைற்கல்லை யடைந்திருக்கிருர். அவரை நாம் வாழ்த்தி வணங்குவோமாக.

காந்தியடிகளின் வாழ்க்கையைச் சதுரமைல் கணக்கில்தான் மேலே நாம் வருணித்திருக்கிறோம். ஏன் தெரியுமா? அவருடைய வாழ்க்கை, எவ்வளவுக் கெவ்வளவு நீளமாகிக் கொண்டு போகிறதோ, அவ்வளவுக் கவ்வளவு அகலமாகியும் கொண்டுபோகிற தினல்தான். உலகத்திலே தோன்றிய மகான்கள் பலருடைய வாழ்க்கை வரலாறுகளை நாம் பரிசீலனை செய்து பார்த்தோமானல், ஒன்று நீளமாகவாவது இருக்கும்; அல்லது அகலமாகவாவது இருக்கும். இரண்டும் ஒன்று சேர்ந்திருக்கக் காண்பது அரிது. சங்கராச்சாரியா ரென்ன, விவேகானந்தரென்ன, இப்படிப்பட்டவர்களுடைய வாழ்க்கை யெல்லாம் நீளமான வாழ்க்கையல்ல; அகன்ற வாழ்க்கை. ஆனால், புத்தர் பிரானுடைய வாழ்க்கை, நீளமும் அகலமும் சேர்ந்த சதுர வாழ்க்கை. அது போலவே காந்தி யடிகளுடைய வாழ்க்கையும் சதுர வாழ்க்கையாகப் 'பிர

காசித்துக் கொண்டிருக்கிறது. எப்பொழுதுமே, யாருடைய சதுர வாழ்க்கையும், தனித்துவமும் மகத்துவமும் பொருந்தியதாகவே இருக்கும். இன்று காந்தியடிகளுடைய திருநாமம் உலகத்தில் எதிரொலியுடன் முழங்கிக் கொண்டிருக்கிறதென்று சொன்னால், அஃது அவருடைய புனித வாழ்க்கைக்குத்தானே தவிர, அவருடைய தளர்ந்த உடலுக்காகவல்ல; குறுகிய உருவத்திற்காகவல்ல. அவர், மகா மேதாவியுமல்ல, அவரைவிடச் சிறந்த அறிஞர்கள், உலகத்தின் நானு பாகங்களிலும் ஆயிரக்கணக்காக இருக்கிறார்கள். அல்லது அவருடைய உறுதியான கடவுள் நம்பிக்கை, அவரை இந்த உன்னத பதவியில் கொண்டு வைத்திருக்கிறதென்றும் சொல்லமுடியாது. அறுபத்துமூன்று நாயன்மார்களையும், சூரதாஸையும், கபீரையும், மீராபாயையும் இவர்கள் போன்ற நூற்றுக்கணக்கான பேரையும் கண்ட பாரத தேசத்திற்கு, காந்தியடிகளின் கடவுள் நம்பிக்கை ஒரு புதுமையுமல்ல; விசேஷமுமல்ல. எத்தனையோ பக்தர்களைப் போல் அவர் ஒருவர். அவ்வளவுதான்.

இப்படி அவர் ஒரு சாதாரணமனிதராகக் காணப்பட்ட போதிலும், உலகத்திலுள்ள அறிஞர்களெல்லோரும் அவருக்கு வணக்கஞ் செலுத்துகிறார்கள்; பக்தர்களெல்லோரும் அவரைப் பூஜிக்கிறார்கள்; பயில்வான்களெல்லோரும் அவர் முன்னே, நூற்றுப் பன்னிரண்டு பவுண்ட் நிறையுள்ள அவர் முன்னே, கைகட்டி நிற்கிறார்கள்; அழகுத் தெய்வங்களெல்லாம், அவருடைய 'பொக்கை வாய்'க்கு முன்னே

வாய்பொத்தி நிற்கின்றன; நாவலர்க ளெல்லோரும் அவருடைய மௌனத்திற்கு முன்னே நாவடங்கி நிற்கிறார்கள்; ஆனால், அவர் 'நாவசைந்தால் நாடு அசைகிறது.' இவை மட்டுமா? மேற்படி அறிஞர்களும், பக்தர்களும், பயில்வான்களும், நாவலர்களும், இன்னோரன்ன பலரும் அவருடைய திருமுன்னர், தங்கள் தங்கள் கலைத்திறமை, தொழில் திறமை முதலியவைகளைக் காட்டி அவருடைய ஆசீர்வாதத்தைப் பெறப் போட்டி போடுகிறார்கள்; அந்த ஆசீர்வாதத்தைக் கொண்டு பிரகாசிக்க வேண்டு மென்று ஆசைப் படுகிறார்கள்; அந்த ஆசீர்வாதத்தைப் பெற்றுப் பிரகாசிக்கிற பிரகாசந்தான் உண்மையான பிரகாச மென்று, சாசுவதமான பிரகாச மென்று நம்புகிறார்கள். இஃதென்ன வேடிக்கை!

1927-ஆம் வருஷம், மகாத்மா காந்தி, தேக அசௌக்கியங் காரணமாக, பெங்களூருக்கு வந்திருக்கிறார். 'குமாரா பார்க்' என்ற மாளிகையில் மைசூர் அரசாங்கத்தார் அவருக்கு வேண்டிய வசதிகள் செய்து கொடுத்து உபசரித்து வருகிறார்கள். ஒருநாள் காலை நேரம். அடிகளார், தமது அறையில் கட்டிலொன்றின்மீது சாய்ந்தவண்ணம் படுத்திருக்கிறார். அவருடைய புகழொளியைக் கண்டு வெட்கப்பட்டோ என்னவோ, சூரியன், ஜன்னல் வழியாக அவரை எட்டி எட்டிப் பார்க்கிறான். அடிகளின் முகம் மலர்ந்திருக்கிறது. அப்பொழுது ஆறரை அடி உயரமுள்ள ஒரு கம்பீர உருவம் உள்ளே நுழைந்தது. நரைத்த தாடி மீசை. முற்காலத்து முனிவர்கள்

போன்ற முகத்தோற்றம். அந்த முகத்தில் அறிவும் சாந்தமும் குலவிக்கொண் டிருக்கின்றன. உள்ளே நுழைந்த அந்த வடிவம், சாய்ந்து படுத்திருந்த உருவத்தை மூன்று முறை வலம் வந்தது. பின்னர் சாஷ்டாங்கமாக நமஸ்காரஞ் செய்துவிட்டு, கூப்பிய கையோடு, பக்தி மேலீட்டால் கண்களில் தாரை தாரையாக நீர் பெருகிக்கொண்டிருக்க, இமய பர்வதம்போல் அசையாது நின்று கொண்டிருந்தது. ஆஜானுபாகுவான அந்த உருவத்தைப் பார்த்துக் காந்தியடிகள் "என்னை இப்படிப் பரிகசிக்கலாமா? தங்களுடைய அறிவுக் கோயிலின் நுழைவாயிலில் கையேந்தி நிற்கும் ஒரு பிட்சுகன் அல்லவா நான்?" என்றார். "அப்படிச் சொல்லக் கூடாது; தாங்கள் ஒரு சமுத்திரம். அதிலிருந்து தெறிக்கும் ஒரு திவலை நான். ஆத்ம சக்திக்கு முன்னே அறிவு எம்மாத்திரம்? சூரியன் முன்னே மின்மினிப்பூச்சி மாதிரி. என்னைத் தூய்மைப் படுத்திக்கொள்ள நான் இங்கு வந்தேனே யன்றி, தங்களைத் தொந்திரவு படுத்துவதற்காக வல்ல" என்றது வேத ஒலியின் எதிரொலிபோன்ற அந்தக் குரல். இந்த வார்த்தையைக் கேட்ட மாத்திரத்தில், காந்தியடிகளின் கண்களில் நீர் ததும்பியது. வணங்கி நின்ற அந்த உருவமும், மௌனமாக விடை பெற்றுக் கொண்டு, அறையை விட்டு வெளியே சென்று விட்டது. இந்தக் காட்சியை நாம் எத்தனை தரம் நமது அகக்கண்ணால் தரிசித்தாலும் அத்தனை தரமும் நமது உள்ளத்தில் 'ஊருத அமிழ்து ஊறி' நம்மைப் பர

வசப் படுத்துகின்றது. வணங்கிய அவர் யார்? அப்பொழுது மைசூர் சர்வகலாசாலையின் 'வைஸ் சான்ஸலராக' இருந்த ஸர் வ்ருஜேந்திர நாத சீலர், உலக அறிஞர்களிலே ஒருவர். சகல கலைகளிலும் அவருக்குள்ள புலமையைப் பாராட்டு முகத்தான் அவரைச் சாதாரணமாக 'நடக்கும் அகராதி' என்று நண்பர்கள் அழைப்பார்கள். ஸர் ஜகதீஸ சந்திர போஸ், ஸர் பிரபுல்ல சந்திர ரே, ஸர் அஷுடோஷ் முக்கர்ஜி முதலிய அறிவு அரசர்க ளெல்லோரும், வ்ருஜேந்திரநாத சீலரை, தங்களுடைய அறிவுச் சக்ரவர்த்தியாகப் போற்றி வந்தார்கள். ஆனால், இந்த அறிவுச் சக்ரவர்த்தி, அந்தச் சத்தியாத்மாவுக்கு முன்னே அடங்கி ஒடுங்கி நின்றார். இப்படி இந்தியநாட்டு அறிஞர்கள் மட்டுமல்ல, மேனாட்டு அறிஞர்களான ஆல்பர்ட் ஐன்ஸ்டீன், கில்பர்ட் முர்ரே, சி. இ. எம். ஜோட், பெர்ரி டேல் கீத், கவுண்ட் ஹெர்மான் கெய்ஸர்லிங் முதலிய பலரும் அவருக்குத் தங்களாலான காணிக்கையைச் செலுத்திய வண்ண மிருக்கிறார்கள். இஃதென்ன புதிர்!

இங்கிலாந்தில் மிஸ் மாட் ராய்டன் என்ற ஓர் அம்மையார். கிறிஸ்துவ ஞானிகளின் கூட்டத்திலே இவருக்கு அதிக மதிப்பு உண்டு. காந்தி யடிகள், 1931-ஆம் வருஷம் வட்டமேஜை மகா நாட்டை முன்னிட்டு லண்டனுக்குச் சென்றிருந்த போது, ஒரு கூட்டத்தில் பேசிவிட்டு மண்டபத்திற்கு வெளியே வந்தார். பிறகு நடை பெற்றதை மேற்படி மாட் ராய்டனே வருணிக்கட்டும்:—

“அவரை ஏராளமான ஜனங்கள் சூழ்ந்து கொண்டு விட்டார்கள். என்னுடைய மோட்டார் எங்கே யிருக்கிற தென்று என்னல் கண்டுபிடிக்க முடியவில்லை. அவருக்கு எதிரில் ஒவ்வொரு வண்டியும் வந்து வந்து போகிறது. தங்களுடைய வண்டியில் மகாத்மா ஏறிக்கொள்ள வேண்டு மென்ற ஆசை அந்த ஒவ்வொரு மோட்டார் சொந் தக்காரருக்கும். அன்று நிரம்பக் குளிர். அதிக மான உடைகளையும் மகாத்மா தரித்துக் கொண் டிருக்கவில்லை. அவரை அதே இடத்தில் அதிக நேரம் தாமதித்து வைத்திருக்கக்கூடா தென்று எண்ணினேன். ‘அகப்பட்ட வண்டியில் போய் விடுங்கள்’ என்று அவரிடம் சொன்னேன். ‘இல்லை; உங்களுடைய வண்டிக்காக நான் காத் துக் கொண்டிருக்கிறேன்’ என்று கூறினர். ஹா! அந்த வார்த்தைகள் எனக்கு மகுடாபிஷேகம் செய் தது போலிருந்தன. ‘அவருக் கென்று ஒன்று மில்லை; ஆனல் எல்லாம் அவருடையனவே’ என்ற யேசு நாதரின் சிஷ்யர் ஒருவருடைய வாசகம் எனக்கு அப்பொழுது ஞாபகம் வந்தது. காந்தி யடிகளுக் கென்று ஒரு மோட்டார் கிடையாது. ஆனல், அவரைச் சுற்றி எத்தனை மோட்டார்கள்!”

‘ரகுபதி ராகவ ராஜாராம்—பதிதபாவன சீதா ராம்’ என்ற நாமாவளியை எல்லோர் இதயத்திலும் ஊன்றி விட்டுச் சென்றவரும், ‘புன கந்தர்வ மஹா வித்யாலயம்’ என்ற சங்கீத ஸ்தாபனத்தின் தந்தை யும், ஏறக்குறைய ஒவ்வொரு காங்கிரஸ் மகா சபை யின் போதும், தம் சிஷ்யர்களுடன் விஜயஞ் செய்து

**காந்தி யார்?**

பாரதமாதாவின் மீது இசையமுதைப் பொழிந்து, அனைவருடைய இதயத்தையும் குளிர்வித்துக் கொண்டிருந்த வருமான காலஞ்சென்ற பண்டித விஷ்ணு திகம்பரர், தமது சங்கீதப் புலமை, தெய்விகத் தன்மை யடைய வேண்டுமென்பதற்காக, சங்கீதமே அறியாத, ஆனால் சங்கீதத்தின் இங்கிதத்திலே தம்மை இழந்து விடும் ஆற்றல் வாய்ந்த காந்தியடிகளின் தலையசை வையும், அருட்பார்வையையும் எதிர்பார்த்தாரே தவிர, ஸ்வர, சுருதி, தாள பேதங்களைப் பற்றிச் சச்சர விட்டு அந்தச் சச்சரவில் சங்கீதத்தையே இழக்கும் சாமர்த்தியமுடைய சங்கீத வித்துவான்களின் கர கோஷத்தை எதிர்பார்த்தாரில்லை.

காந்தியடிகள், லண்டனில் பாரிஸ்டர் பரீட்சைக்குப் படித்துக்கொண்டிருந்தபோது மேனாட்டு நடனத்தைக் கற்றுக் கொண்டார் என்பதை ஞாபகம் வைத்துக்கொண்டிருந்தோ என்னவோ, இப்பொழுதுபால் ரோபெஸன் (Paul Robeson) என்ற நீக்ரோ நடிகர், அவர் முன்னிலையில், தமது நடிகத் திறமையைக் காட்ட விழைகிறார்.

உலகப் பிரசித்தி பெற்ற காமா என்கிற பயில்வான், தமது தேகவலிமைக்கு அவருடைய ஆசீர்வாத முத்திரை தேவை என்று விழைகிறார். காந்தியடிகள், சிறு பையனாகப் பள்ளிக்கூடத்தில் படித்துக்கொண்டிருந்தபோது, தேகப்பயிற்சி விஷயத்தில் சிறிது கூடக் கவலை செலுத்தாம லிருந்ததும், ஒரு நாள் தேகப் பயிற்சி வகுப்புக்குச் செல்லாமலிருந்ததற்காக இரண்டணா அப

ராதம் செலுத்தியதும் காமாவுக்கு ஞாபகமில்லை போலும்!

'கீளார் கோவண முடுக்கும்' காந்தியடிகளின் கையைப் பிடித்துக் குலுக்கிப் பெருமையடைய அரச குடும்பத்தினர் அநேகர் ஆவல் கொள்கிறார்கள். இங்கிலாந்திலும் இத்தலியிலும் அரச குடும்பத்தினர் அவருக்கு அளித்த உபசாரங்களை யார் மறக்க முடியும்?

காந்தியடிகள் சிறந்த ஓர் அரசியல்வாதியென்றோ, ராஜதந்திரியென்றோ சொல்ல முடியாது. தாம் அந்தமாதிரி அழைக்கப்பட்டால், அதை அவர் விரும்புவதுமில்லை. தம்மை ஒரு சாதாரண விவசாயி என்று சொல்லிக் கொள்வதில்தான் அவர் பெருமையும் திருப்தியுமடைகிறார். ஆயினும், உலகத்தையே ஆட்டி வைக்கும் சாமர்த்தியமுள்ள அரசியல்வாதிகளும் ராஜ தந்திரிகளும் அவரைக் காணவும் பின் வாங்குகிறார்கள். பிடிவாதமுள்ள ராஜ தந்திரியான ஸ்ரீ வின்ஸ்டன் சர்ச்சிலும், தந்திர அரசியல்வாதியான லார்ட் வில்லிங்டனும் அவரைக் காணக்கூட மறுத்து விட்டார்கள்!

இவைகளையெல்லாம் நினைவுபடுத்திக்கொண்டு பார்க்கிறபோது, காந்தியடிகள் ஒரு புதிர் என்ற முடிவுக்குத்தான் யாரும் வரக்கூடும். இந்தப் புதிரை விடுவிக்க, அநேக அறிஞர்கள் முயற்சி செய்திருக்கிறார்கள். ஆனால், அவர்களிற் பெரும்பாலோர் இந்தப் புதிரிலேயே சிக்கிக் கொண்டு விட்டார்கள். உண்மையிலேயே அவர் ஒரு புதிரா? இதற்கு விடை 'ஆம்' என்றும் சொல்லலாம், 'இல்லை' என்றும்

சொல்லலாம். அரசியல் பீடத்தில் அவரை வைத்திருத்திப் பார்க்கிறபோது, அவருடைய சொற்களிலும் செயல்களிலும் அநேக முரண்பாடுகளிருப்பதைப் பார்க்கிறோம். ஆனால், மகான் தன்மை என்னும் பரிசுத்த ஆகாயத்தில், அதாவது மேலான நிலையில், அவர் எவ்விதக் களங்கமுமில்லாத ஒரு சந்திரனாகவே பிரகாசிக்கிறார். அவர் ஒரு மகான்; வீரன்; இவை யிரண்டினைக் காட்டிலும் மேலாக அவர் ஒரு மனிதன். இந்த அமிசங்களைப் பற்றிச் சிறிது விஸ்தரித்துக் கூறுவது இந்தக் கட்டுரையின் நோக்கம்.

காந்தியடிகளை, 'மகாத்மா' வென்று பட்டஞ் சூட்டியே நாம் போற்றுகிறோம். மகாத்மா வென்றால் என்ன அர்த்தம்? இதை ரவீந்திரநாத் தாகூர் ஓரிடத்தில் பின்வருமாறு விளக்குகிறார்:

> "தனி மனிதனிடத்திலுள்ள 'நான்' என்பது விடுதலை பெற்று, எல்லோரிடத்திலும் 'தான்' ஆகப் பரிணமிக்கிற போது, மகாத்மா வாகிறது. உலகத்திலுள்ள எல்லா ஜீவராசிகளையும், யாரொருவர், 'தாம்' ஆகப் பார்க்கிறாரோ அவர்தான் மகாத்மா."

சாதாரண விவகார பாஷையில் இதைச் சொல்லப்போனால், யாரொருவர் உலகத்திலுள்ள எல்லா ஜீவராசிகளிடத்திலும் அன்பு செலுத்துகிறாரோ, எல்லோருடைய துன்பத்தைத் தமது துன்பமாகவும், எல்லோருடைய இன்பத்தைத் தமது இன்பமாகவும் ஏற்றுக் கொள்கிறாரோ அவரே மகாத்மா. இப்படிப்

பட்டவர்களை மகான்க ளென்றும், மகா புருஷர்க ளென்றும், தீர்க்கதரிசிக ளென்றும், பரம ஞானிக ளென்றும், லட்சியத்திற்காக உயிரைத் துரும்பென மதிக்கும் மகா வீரர்க ளென்றும் பல பட அழைப்பது வழக்கம். இவர்கள் தங்களுக்காக வாழ்வதில்லை; பிறருக்காகவே வாழ்கிருர்கள். 'பணிசெய்து கிடப் பதுதான்' இவர்கள் கடன்.

இத்தகைய மகான்களின் வாழ்க்கை வரலாறு களை நாம் சிறிது ஊன்றிப் பார்த்தோமானல், துன்ப மும் துயரமுமே இவர்களுடைய வாழ்க்கையின் நியதி களா யிருக்கின்றன. இவர்கள், அநேக சமயங்களில் தாங்களே வலிய, துன்பத்தை ஏற்றுக் கொள்கிருர் கள்; சில சமயங்களில் பிறரால் துன்புறுத்தப்படு கிருர்கள். ஆனல் இவர்கள் அந்தத் துன்பங்களை யெல்லாம் பொருட்படுத்துவதே யில்லை. அவற்றைப் பார்த்து இவர்கள் பரிகசிக்கிருர்கள்; புன்சிரிப்புச் சிரிக்கிருர்கள். சென்ற நூற்றுண்டின் ஆரம்பத்தில், ஹென்ரி தோரு (Henry Thoreau) என்ற ஓர் அமெ ரிக்க ஞானி இருந்தான். அவன் சிறைவாசத்தை அநுபவித்தான். அப்பொழுது கூறுகிருன்:

> "என்னைச் சுற்றி யிருக்கும் இந்தச் சிறைச் சாலைச் சுவர்களைக் கட்டுவதற்காகச் செலவழிக்கப் பட்ட கல்லும் சுண்ணும்பும் [1]வீண்தான். சிறை யதிகாரிகள், என் தேகத்தை எவ்வளவு பத்திர மாகப் பூட்டி வைக்கிருர்கள்! ஆனல், என்னுடைய மனம், எவ்விதத் தங்கு தடையு மில்லாமல் அவர் களோடேயே உலவிக்கொண் டிருக்கிறதே!



3

பாவம்! சிறு பிள்ளைகள், தங்களுக்கு வேண்டாத வர்கள் யாராவது எதிர்ப்பட்டால், அவர்களை நேராக எதிர்க்கத் தைரியமில்லாமல், தங்களுடைய நாயைப் பிடித்துத் திட்டுவார்கள். அதைப்போ லிருக்கிறது இந்தச் சிறை யதிகாரிகள் என்னைப் பூட்டி வைத்திருப்பது!"

இதைப்போல் மகான்கள் சிறையையோ சங்கிலி யையோ லட்சியஞ் செய்யமாட்டார்கள். 'மகான் களின் புனிதத் தன்மையானது, அதாவது தூயமன மானது, தூக்குமரத்தில்தான் இன்பம் நுகர்கிறது' என்ற வாசகப்படி, இவர்கள் உலக வாழ்க்கையிலே எவ்வளவு துன்பங்களை யநுபவித்தாலும், அவை களைக் கண்டு அஞ்சிப் பின்வாங்குவ தில்லை; சலிப்புக் கொள்வதில்லை. அதற்கு மாறாக, இவர்களுடைய மகான் தன்மையானது, மேற்படித் துன்பங்களை இன் னும் தீவிரமாக எதிர்த்துப் போராடும்படி இவர் களைத் தூண்டுகிறது. இப்படிப் போராடிப் போராடி இவர்கள் உலகத்துக்குச் சாந்தியை வாங்கிக் கொடுக் கிறார்கள். இவர்களுடைய துன்பத்தினால் உலகம் இன்புறுகிறது.

இவர்கள் ஏன் வலிய இப்படித் துன்புறுகிறார் கள்? எல்லா ஜீவராசிகளிடத்திலும் இவர்கள் கொண்டுள்ள அன்புதான் இதற்குக் காரணம். அன் பும் துன்பமும் இணைபிரியாத இரட்டைச் சகோதரர் கள் மாதிரி. "இவை யிரண்டும் மனிதனுடைய இரண்டு கண்கள்போ லிருக்கின்றன" என்கிறார் அறிஞர் ராதாகிருஷ்ணன். கண்க ளில்லாதவன்

மனிதனுக மாட்டான். அதைப்போல் அன்பு செலுத்தாதவர்களும் துன்ப மநுபவியாதவர்களும் மனிதர்களாகமாட்டார்கள். துன்பத்திற்குப் பயந்து அன்பு செலுத்த மறுக்கிறவன் மனிதனல்ல; அவன் ஒரு ஜடவஸ்து; எதற்கும் உதவாத ஒரு பிண்டம். தாந்தே என்ற இத்தாலிய மகா கவிஞன் கூறியமாதிரி .'உலகத்தினிடம் அன்பு செலுத்துகிற மகான்கள் எந்த யுகத்தில் அவதரித்தபோதிலும் அவர்கள் மகத்தான துயர மென்னும் மகுடத்தையே அணிந்துகொண்டிருக்கிருர்கள்.' எவனெருவன் உண்மையாகவே அன்பு செலுத்துகிருனே அவன் துன்பமநுபவிப்பதினின்று தப்ப முடியாது. எவ்வளவுக் கெவ்வளவு ஒருவன் மற்றவர்கள்மீது அதிகமாக அன்பு செலுத்துகிருனே அவ்வளவுக் கவ்வளவு அதிகமாக அவன் துன்பத்தை அநுபவிக்கிருன். ஒரு தாய், தன் குழந்தையின் இன்பத்திற்காக எத்தனையோ விதமான துன்பங்களை அநுபவிக்கிருள். அப்படி அநுபவிப்பதிலே ஒரு திருப்தி கொள்கிருள். அந்தத் திருப்தியே அவள் அடைகிற இன்பம். அதைப் போலவே, மகான்களுடைய அன்பும் இருக்கிறது. தாய், தன் குழந்தையினிடத்தில் அன்பு செலுத்தாமல் எப்படி இருக்க முடியாதோ, அப்படியே மகான் தன்மை யுடையவர்களும், மற்றவர்க ளிடத்தில் அன்பு செலுத்தாம லிருக்க முடியாது. தாய் எப்படி, அந்த அன்பின் மூலமாகத் துன்பத்தை மனமகிழ்ச்சியுடன் வரவேற்கிருளோ அப்படியே மகான்களும் துன்பத்தை வலிய ஏற்றுக் கொள்கிருர்கள்.

இங்ஙனம் இவர்கள் அன்பையும் துன்பத்தையும் ஒரு கண் கொண்டு பார்ப்பதினால்தான் இவர்களுடைய செயல்களில் அநேக முரண்பாடுகள் இருப்பதாக நமக்குத் தோன்றுகிறது. ஏனென்றால், இவர்கள், தங்களைப் பொறுத்த மட்டில் அன்பெனும் உயர்ந்த சிகரத்தில் இருக்கிறார்கள். ஆனால், கீழே அதாவது உலகத்திலே, அறியாமை, வறுமை முதலிய துன்பங்கள் நிறைந்திருப்பதைப் பார்க்கிறார்கள். இவர்கள் இதயம் துடி துடிக்கிறது. பரம கருணையினால், தங்கள் உச்ச நிலையி லிருந்து கீழே இறங்குகிறார்கள். மேலான உண்மைகளை உபதேசிக்கிறார்கள். அவைகளை அறிந்துகொள்ளக் கூடிய தகுதி ஜனங்களுக்கு ஏற்பட் டிருக்கிறதா வென்பதை இவர்கள் பார்ப்பதில்லை. ஏனென்றால், அந்த ஜனங்கள் தங்களுடைய துன்ப நிலையை இன்ப நிலையாகக் கருதிக் கொண் டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்க ளிடம் சிறந்த உண்மைகளை உபதேசிக்கிறபோது, அவை அவர்களுக்கு முரண்பாடாகவே தெரிகின்றன. இரண்டு கடல் நீர்கள் ஒன்று சேர்கிறபோது, இரண்டுக்கும் வேறுபாடு நன்றாகத் தெரிகிறதுபோல், மேலான தன்மையும் கீழான தன்மையும் ஒன்று சேர்கிறபோது, சில மாறுபாடுகள் இருக்கவே செய்யும். அடிப்படையில் ஒன்றுதான். எல்லாம் நீர்தான். நீரின் நிறத்தில், கனத்தில், கலப்பில், வித்தியாசங்கள் இருக்கக் கூடும்.

ஆனால், இப்படிப்பட்ட முரண்பா டுடையவர்களாலேயே உலகத்திற்கு நன்மை செய்ய முடியும்.

இவர்கள்தான் உலகத்திற்கு நன்மை செய்திருக்கிறார்கள். பிரபஞ்ச இதிகாசம், இந்த உண்மையை நமக்குச் சதா அறிவுறுத்திக் கொண்டிருக்கிறது. உலகத்திலே தோன்றின எந்தப் புரட்சியை வேண்டுமானாலும் எடுத்துக் கொண்டு ஆராய்ந்து பாருங்கள். தங்களுடைய சுற்றுச் சார்பைக் கண்டு அதிருப்தி கொண்டவர்கள்தான், புரட்சிகளுக்கெல்லாம் காரணர்களாயிருக்கிறார்கள். இவர்களுடைய சமகாலத்தவர் இவர்களைக் கிளர்ச்சிக்காரரென்றும், கலகக்காரரென்றும், புரட்சிக்காரரென்றும் சொல்லி, இவர்களைப் பலவிதமாக இம்சிக்கிறார்கள். ஆயினும், இவர்கள் புதிய கொள்கைகளை, புதிய இயக்கங்களை விதைத்து விட்டு மறைந்து விடுகிறார்கள். வருங்கால சந்ததியார், இந்த விதையிலிருந்து கிடைத்த மகசூலை அநுபவிக்கிறார்கள். அப்பொழுதுதான் இவர்களுடைய பெருமை தெரிகிறது. மகான்களென்று இவர்கள் போற்றப்படுகிறார்கள். புத்தர்பிரான், தமது காலத்தில் நிறைந்திருந்த மூட நம்பிக்கைகளையும், வெற்றுச் சடங்குகளையும் எதிர்த்துப் போராடினார். பல பேருடைய பரிகாசத்திற்கும் எதிர்ப்புக்கும் ஆளானார். யேசுநாதர், தம்மைச் சுற்றியிருந்த ரோம ஏகாதிபத்தியத்தின் போலித் தனத்தையும் ஆடம்பரத்தையும் எதிர்த்துக் கிளர்ச்சிசெய்தார். ஆனால், ஜனங்கள் அவர் மீது கல்லெறிந்தார்கள்; சிலுவையிலே அறைந்தார்கள். பிற்காலத்திலே தோன்றின ஸாக்ரடீஸ் என்ன, மார்ட்டின் லூதர் என்ன, பிரெஞ்சுப்புரட்சிக்கு, விதையூன்றின ரூஸ்ஸோ என்ன, கார்ல் மார்க்ஸ் என்ன

லெனின் என்ன, இப்படிப்பட்டவர்கள் புரட்சிக் காரர்களென்று முத்திரையிடப் பெற்று அநேக அவ திகளுக் குட்படுத்தப்பட்டார்கள். ஆனால், இவர்க ளெல்லோரும் மகான்கள்.

இவர்கள் வெளிப் பார்வைக்கு அநாகரிகர்கள் போலவும் பித்தர்கள் போலவும் நடந்து கொள்ள லாம். ஆனால், உலகத்தை நாகரிகப்படுத்தவும், உலகத் தின் பித்தத்தைத் தெளிவிக்கவுமே இவர்கள் பாடுபடு கிறார்கள். நாம் இப்பொழுது நம்மை நாகரிகர்கள் என்று சொல்லிக் கொள்கிறோம். ஆனால் உண்மை யில் நாம் நாகரிகத்தை யடைந்திருக்கிறோமா? நாக ரிக வாழ்க்கையின் அடிப்படை யென்ன வென்ற கேள்வியை எழுப்பிக் கொண்டு அதற்குப் பதில் சொல்லுகிற முகத்தான் ஓர் அறிஞன் கூறுகிறான்:

> "ஒரு சமுதாயத்தில், வலியார், எளியாருடைய சுமையை எவ்வளவுக் கெவ்வளவு குறைக்கிறார் களோ அவ்வளவுக் கவ்வளவு அந்தச் சமுதாயத் தின் வாழ்க்கையானது நாகரிக மடைகிறது."

இந்த அளவு கொண்டுதான் மகான்கள் உலகத்தைப் பார்க்கிறார்கள். உள்ள நிலையைக் கண்டு இரங்கு கிறார்கள்; அதிருப்தி கொள்கிறார்கள். விளைவது என்ன? புரட்சி, அல்லது சிறைவாசம், அல்லது தூக்குமேடை.

ஆயிரம் பேரில் ஒருவர்தான் நன்றாகப் பேச முடி யும். நன்றாகப் பேச முடிந்த ஆயிரம் பேரில் ஒருவர் தான், தெளிவாகச் சிந்திக்க முடியும். தெளிவாகச் சிந்திக்கிற ஆயிரம் பேரில் ஒருவர்தான், வாழ்க்கை

யில் தங்களுடைய லட்சியம் இன்னதென்பதைத் தெரிந்துகொள்ள முடியும். தெரிந்துகொண்டு விட்டால் மட்டும் போதுமா? அதனை அடைய வேண்டாமா? தெரிந்துகொண்ட ஆயிரம் பேரிலே ஒருவர் தான், தங்கள் லட்சியத்தை அடைய வேண்டுமென்ற ஆவல் கொண்டு, அதனை நோக்கிப் பிரயாணஞ் செய்ய முடியும். அப்படிச் செல்வோரில் எத்தனையோ பேர், வழியில் களைப்பினால் பின்தங்கிவிடலாம்; வேறு சிலர், வேறு ஆசைகளினால் தூண்டப்பட்டு வேறு பாதைகளுக்குச் சென்றுவிடலாம்; இன்னுஞ் சிலர் லட்சியப் பிரகாசத்தினால் கண் கூசிக் குருடர்களாய் மேல் நோக்கிச் செல்லாமலேயே பின் தங்கிவிடலாம். இங்ஙனம் லட்சியப் பாதையானது மகா கடினமான பாதையாயிருந்தபோதிலும், யாரொருவர் அந்தப் பாதையில் அடி எடுத்து வைக்கிறார்களோ, அடியெடுத்து வைக்கக்கூடிய ஆற்றலையும் துணிச்சலையும் பெறுகிறார்களோ, அவர்களெல்லோரையுமே பொதுப்படையாக மகான்களென்று உலகம் அழைக்கிறது.

மகான் தன்மைக்குரிய இந்தமாதிரியான லட்சணங்களைக் கொண்டு காந்தியடிகளை நாம் நோக்குகிறபோது, அவர் ஒரு மகானென்பது நன்கு தெரியும். சிலருடைய வாழ்க்கையில், இளமையிலேயே இந்த மகான் தன்மை விகாசமடைகிறது. இன்னுஞ் சிலரிடத்தில், வாழ்க்கையின் பிற்பகுதியிலேயே விகாசமடைகிறது. எப்படி, எப்பொழுது விகாசமடைந்தாலும், சிறு பிராயத்திலேயே இதற்கு முளை

தோன்றி விடுகிறது. ஆனால், இந்த முளையை ஒரு சிலரால்தான் அறியமுடிகிறது; பெரும்பாலோரால் அறிய முடிவதில்லை. காந்தியடிகளின் சுய சரித் திரத்தை ஊன்றிப் படிப்போர்க்கு இந்த உண்மை புலனாகும். காந்தியடிகள் ஒரு மகானென்பதை இந்திய மகாஜனங்கள் தெரிந்துகொள்ள ஆரம்பித்த தெல்லாம், அவர் இந்தியாவில் ரௌலட் சத்தியாக் கிரகம் தொடங்கி நடத்திய பிறகுதான். ரவீந்திர நாத் தாகூர் 1921-ஆம் வருஷம் சபர்மதி ஆசிரமத் திற்கு விஜயம் செய்திருந்தபோது, காந்தியடிகளுக்கு **மகாத்மா** பட்டஞ் சூட்டினார். அது முதற்கொண்டே அந்தப் பெயர் உலகத்தில் முழங்கிக்கொண்டு வரு கிறது. ஆனால், இந்த மகாத்மா தன்மை, காந்தியடி களிடத்தில் இருப்பதை அவருடைய 'அரசியல் குரு' வான கோபால கிருஷ்ண கோகலே, 1912-ஆம் வருஷத்திலேயே தெரிந்துகொண்டு விட்டார். அவர் கூறுகிறார்:

> "வீரர்களும் மகான்களும் எந்தத் தன்மை களைக் கொண்டு தயாரிக்கப் படுகிறார்களோ அந்தத் தன்மைகளெல்லாம் காந்தியடிகளிடத்தில் இருக் கின்றன. இதில் சந்தேகமில்லை. இது தவிர, தம் மைச் சுற்றியுள்ள சாதாரண மனிதர்களை வீரர் களாகவும் மகான்களாகவும் ஆக்கிவிடக்கூடிய அபாரமான ஆத்ம சக்தியும் அவரிடத்தில் இருக் கிறது."

இந்த மகான் தன்மை அவருக்கு எப்படி ஏற் பட்டது? அவரை ஏன் ஜனங்கள் **மகாத்மா** வென்று

போற்றுகிறார்கள்? அவரைக் காட்டிலும் அறிவு, அநுபவம், வயது முதலியவைகளில் சிறந்தவர்கள் பலரிருக்க, அவருக்கு மட்டும் ஏன் இந்தத் தனி மதிப்பு? இதைச் சிறிது விளக்குவோம். அல்டோஸ் ஹக்ஸ்லி (Aldous Huxley) என்ற நமது சமகாலத்து மேனாட்டு அறிஞன் ஓரிடத்தில் கூறுகிறான்:—

"அரசியல் பரம்பரை இருக்கிறதே அது மகா அயோக்கியத்தனமான பரம்பரை. உலகத்தில் இரண்டுவிதமான தர்மங்கள் இப்பொழுது அங்கி கரிக்கப் பட்டிருக்கின்றன. தனிப்பட்ட நபர்களுக் கென்று ஒரு தர்மம்; ஜாதிக்கென்று அதாவது தேசத்திற்கென்று வேறு தர்மம். ஒரு மனிதன் தன் சொந்த வாழ்க்கையில் யோக்கியனாகவும், கருணை நிறைந்தவனாகவும், மற்றவர்களுடைய குறை நிறைகளைப் பாராட்டுகிறவனாகவும் இருக் கிறான். ஆனால், அதே மனிதன், ஒரு ஜாதியின் பிரதிநிதியாகவோ, அல்லது ஏதோ ஒரு கட்சியி னுடைய பிரதிநிதியாகவோ வருகிறபோது, தனது தனிப்பட்ட வாழ்க்கையில் எந்தக் காரியங்களைச் செய்தால் இழிவு என்று கருதுகிறானோ அதே காரியங்களைக் கூச்சமின்றிச் செய்கிறான். அப் படிச் செய்வதுதான் நியாயமென்றும் சாதிக் கிறான்.

"இதனால் என்ன ஏற்படுகிற தென்றால், ஒரு ஜாதிக்கு, சக்தியும் புகழும் இருக்கிறதென் றும், ஆனால் அதற்கு ஒழுக்கம் அல்லது தர்மம் என்பதே கிடையாதென்றும் நாம் கருதிக் கொள்வ தாக ஏற்படுகிறதல்லவா? ஜாதி என்ற முறையில் நாம் கேவலமாக நடந்துகொள்வது சரியென்று நம்புகிறோம்."

காந்தியடிகள், அரசியலை ஒரு பாரமார்த்திக நிலைக்கு உயர்த்தியிருக்கிறார் என்று சொல்வதின் தாத்பரியமெல்லாம் இதுதான். அதாவது, நாம் நமது சொந்த விவகாரங்களில் எந்த நியாயத்தை, எந்த தர்மத்தை அநுசரித்து நடக்கிறோமோ அதே நியாயத்துடனும் தர்மத்துடனும் பொதுவிவகாரங்களிலும் நடந்துகொள்ள வேண்டும். சொந்த வாழ்க்கையில் நம் சகோதரர்களுடனும், உற்றார் உறவினர்களுடனும் எப்படி கண்ணியமாகவும் பொறுப்பறிந்தும் நடந்து, அதன் மூலமாக அவர்களுடைய அபிமானத்தையும் நன் மதிப்பையும் பெறவேண்டுமென்று ஆவல் கொள்கிறோமோ அதைப்போல், தேசிய விவகாரங்களிலும் நாம் நடந்துகொள்ள வேண்டும். அதாவது, நாம் வேறே, தேசம் வேறே என்று பிரிக்கக் கூடாது. தேச வாழ்க்கையிலேதான் நமது வாழ்க்கையை ஐக்கியப் படுத்திக்கொள்ள வேண்டும். அப்படிக்கின்றி நமக்கென்று ஒரு வாழ்க்கையும் தேசத்திற்கென்று ஒரு வாழ்க்கையுமாக, வாழ்க்கையை இரண்டு கூறுபடுத்திக்கொண்டு நடப்போமானால் நாமும் அபிவிருத்தி யடைவதில்லை; தேசமும் பாழடைகிறது. நம்முடைய அரசியல் தலைவர்களிற் பெரும்பாலோர், வாழ்க்கையை, இங்ஙனம் இரண்டு கூறுபடுத்தியே பார்க்கிறார்கள். பொதுஜன அபிப்பிராயம், அவர்களுக்கு மதிப்புக் கொடுக்கவில்லையென்று சொன்னால், அஃது அதனுடைய குற்றமாகுமா? ஆனால், காந்தியடிகள், தமது வாழ்க்கையை ஒரு மொத்தத் தொகுப்பாகவே பார்க்கிறார். தாம் வேறே, தேசம் வேறே,

என்று பார்ப்பதில்லை. தேசத்தின் க்ஷேமத்திலேதான் தம்முடைய க்ஷேமம் இருக்கிறதென்பதை அவர் பல முறை தம் செயல்களால் நிரூபித்துக் காட்டியிருக்கிறார். தேசத்திற்காக அவர் இருக்கிறாரே தவிர, அவருக்காக தேசம் இல்லை. இந்த மாதிரியான விரிந்த மனப்பான்மையை, எல்லா அரசியல் தலைவர்களிடத்திலும் நாம் காண்கிறோமா? இல்லையே. இந்தியாவிலே மட்டுமல்ல, உலகத்திலுள்ள எல்லா அரசியல் வாதிகளிடத்திலும் இந்த இரண்டுவித வாழ்க்கைத் தோற்றங்கள்தான் காணப்படுகின்றன. போரும் பகைமையும் உலகத்திலே இது போழ்து மலிந்திருப்பதற்கெல்லாம் காரணம், அரசியல் வாதிகள் இங்ஙனம் இரண்டுபட்ட வாழ்க்கையை நடத்துவதுதான். மகாத்மா காந்தியினிடத்தில் இந்த இரண்டுபட்ட தன்மை இல்லாததினாலேயே அவர் உலகத்தினரால் போற்றப்படுகிறார்.

ஸ்தூலமாகப் பார்க்கிறபோது, இன்றைய மனிதன் வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் முன்னேறியிருக்கிறான். அவனுடைய அறிவு, திறமையின் கோபுரத்தின் மீது கொலுவிருக்கிறது. நமக்கு விவசாய நிலங்களும், போக்குவரவு சாதனங்களும் அதிகப்பட்டிருக்கின்றன. ஒவ்வொருவர் வீட்டிலும் ரேடியோ இருக்கிறது. பிரதியொருவனும் சொந்தமாக ஓர் ஆகாய விமானத்தை வைத்துக் கொண்டிருக்கக் கூடிய காலம் விரைவிலே வரக்கூடும். உலகத்தில் வியாதியே இல்லாதபடி செய்யப்பட்டு விடலாம். தொழிலாளர்களுக்கு வயோதிகச் சம்பளம் கொடுத்து

அவர்களைக் கவலைக் கடலினின்று கரையேற்றிவிட லாம். இவையெல்லாம் நடைபெற்று விட்டாலும், மனிதன் சாந்திபெறக் கூடுமா? அவன், தன் வாழ்க் கையில் ஆறுதல் காண்பானா? மாட்டான். வாழ்க்கை யென்பது என்ன? வயிறு நிறைய ஆகா ரம் உண்பதா? அல்லது அறிவுக் கடலில்மட்டும் மிதந்து கொண்டிருப்பதா? இல்லை; இல்லை. எவ னொருவன் தன் அந்தரங்கத்தில் இன்பத்தை யடை கிறானோ, அதாவது இதய சாந்தி பெறுகிறானோ அவன் தான் வாழ்க்கையை நடத்துகிறவன். இந்தத் தூய வாழ்க்கையைப் பொதுவாக உலக மக்களுக்கு, சிறப் பாக இந்திய மகா ஜனங்களுக்கு அளிக்க வேண்டு மென்பதுதான் காந்தியடிகளின் ஆவல். இதற்காகவே அவரை எல்லோரும் போற்றுகிறார்கள். எல்லாத் தலைவர்களிடத்திலும் இந்த ஆவல் இருக்கிறதா? இல்லையே.

அரசியல் தலைவர்களிற் பெரும்பாலோர், மனித னுடைய புறத் தேவைகளை மட்டும் கவனித்துக் கொண்டு செல்கிறார்கள். ஆனால், காந்தியடிகள், மனிதனுடைய அகத் தேவை யொன்று இருக்கிற தென்பதை உணர்ந்து அதனைப் பூர்த்தி செய்ய விழை கிறார். இதற்காக அவர், புறத் தேவைகளைப் புறக் கணிக்கவில்லை. ஒரு செடியானது செழிப்பாக வளர வேண்டுமானால் அதற்கு எப்படி நல்ல உரம் போட்டு, ஒழுங்காக நீர் பாய்ச்சிக்கொண்டு வரவேண்டுமோ, அதைப்போல், மனிதனுடைய அக வளர்ச்சியானது, அவனுடைய புற வளர்ச்சியை ஒட்டியிருக்கிறது.

ஏதோ ஏகதேசமாக ஒரு சில மகான்கள்தான், புறத்தைப் பொருட்படுத்தாமல் அக வாழ்க்கையில் முன்னேற்றமடைந்திருக்கிறார்கள். ஆனால், சாதாரண ஜனங்களைப் பொறுத்தமட்டில், அவர்களுடைய புறத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொடுத்தால்தான், அவர்களுடைய அக வளர்ச்சிக்கு நாம் வழி காட்ட முடியும். காந்தியடிகளின் உறுதியான நம்பிக்கை இதுதான். மனிதனுடைய வயிற்றுப் பசியைத் தீர்ப்பதைக் காட்டிலும் அவனுடைய ஆத்மப் பசியைத் தீர்ப்பதுதான் சிரேஷ்டமென்று ஒரு சமயம் ரவீந்திர நாத் தாகூர் கூறியதற்குக் காந்தியடிகள் என்ன விடையளிக்கிறார் பாருங்கள்!

> "கவிஞர் தமது கவிதா உணர்ச்சிக்குப் பொருத்தமாக எதிர்காலத்தின்பொருட்டு வாழ்கிறார். நம்மையும் அந்தமாதிரி வாழுமாறு சொல்கிறார். காலை நேரத்திலே, பட்சிகள் ஆகாயத்தில் குதூகலமாகப் பறப்பதை அவர் நமக்கு வருணித்துக் காட்டுகிறார். வாஸ்தவம். இந்தப் பட்சிகளுக்கு வயிறு நிறைய ஆகாரம் கிடைத்துவிட்டது. முந்திய நாள் இரவு ஓய்வு கொண்டதி னிமித்தம் அவைகளின் தேகத்தில் நல்ல ரத்தம் ஓடிக்கொண்டிருக்க, ஆகாயத்தில் சிறகு விரித்துப் பறக்கின்றன. ஆனால் நான் காண்கிற பட்சிகள் சிறகுகளை அசைக்கக்கூட முடியாத பலஹீனத் தோடிருக்கின்றன. என் ஆசை வார்த்தைகள், அந்தச் சிறகுகளுக்குப் பலத்தை அளிக்கவில்லை. இந்திய ஆகாயத்தின் கீழ் வாழும் மனிதப் பறவை

யானது, முன்னிரவு எவ்வளவு பலஹீனத்துடன் படுக்கச் சென்றதோ அதைவிட அதிக பலஹீனமாக மறுநாள் காலையில் எழுந்திருக்கிறது. லட்சக் கணக்கான இந்திய மக்களுக்கு, எப்பொழுதும் விழிப்பு நிலையிலேயே இருக்கவேண்டியிருக்கிறது; அல்லது மெய்மறந்த நிலையில் இருக்கவேண்டியிருக்கிறது. இந்த நிலையைப் பற்றி நாம் தெரிந்துகொள்ள வேண்டுமானால், இந்த நிலையை நாம் அநுபவிக்கத்தான் வேண்டும். நோய்வாய்ப்பட்டுக் கதறும் நோயாளிகளை ஒரு பாட்டுப்பாடி என்னல் குணப்படுத்த முடியவில்லை. பசி நோயால் அவதியுறும் லட்சக் கணக்கான இந்திய மக்கள் ஒரே ஒரு பாட்டைத்தான் கேட்கிறார்கள். அஃதென்ன? பலத்தை அளிக்கக்கூடிய ஒரு கவளச் சோறு."

பொதுவாக உலகத்திலுள்ள ஏழை மக்களும், சிறப்பாக இந்திய மக்களும் காந்தியடிகளை ஒரு தெய்வமாகக் கொண்டாடுவதின் ரகசியம் இதுதான். அவர் ஜனங்களுடைய தேவைகளைத் தெரிந்துகொண்டு மட்டும் இருக்கவில்லை; உணர்ந்து, அந்த உணர்ச்சியைச் செயல் மூலமாக வெளிப் படுத்துகிறார். மற்றத் தலைவர்கள் ஜனங்களுடைய தேவைகளைத் தெரிந்து கொண்டிருப்பதோடுமட்டும் திருப்தியடைகிறார்கள்.

சாத்வீக எதிர்ப்பு முறையை முதன் முதலாகக் கையாண்டவர் காந்தியடிகளேயென்றும், இந்த ஆயுதத்தைக் கண்டுபிடித்தவர் அவரேயென்றும், இதற்காகவே உலகம் அவரைப் போற்றுகிறதென்றும்

சிலர் சொல்லுகிருர்கள். இதை நாம் ஒப்புக்கொள்ள முடியாது. இதற்காக காந்தியடிகளை உலகம் போற்றுகிறதென்று சொன்னுல், அது மலிவான போற்றுதல் என்றுதான் நாம் கொள்கிறோம். அதாவது அவருடைய உயர்நிலைக்கு இது தக்க மதிப்பல்ல. இதைச் சிறிது விஸ்தரித்துக் கூற விரும்புகிறோம்.

சாத்வீக எதிர்ப்பு அல்லது ஒத்துழையாமையென்பது, காந்தியடிகளால் முதன் முதலாகக் கண்டு பிடிக்கப்பட்டதுமல்ல; இந்தியாவின் சரித்திரத்திற்குப் புறம்பானதுமல்ல; புதிதுமல்ல. "தீங்கிழைத்தவருடைய வாசற்படியில் உட்கார்ந்து, அந்தத் தீங்குக்குப் பரிகாரம் தேடிக்கொடாவிட்டால் இறந்து போவதென்று நிச்சயப்படுத்திக்கொள்வது, மரணம் வரையில் பட்டினி கிடப்பது, சட்டங்களை மறுப்பது, தேசத்தினின்று வெளியேறுவது, அரசனைத் திரஸ்காரஞ் செய்வது, அரசனைப் பகிரங்கமாகக் கண்டிப்பது முதலியவைகளெல்லாம் அஹிம்ஸா தர்ம முறையில் அனுஷ்டிக்கப்படக்கூடிய ஆயுதங்களென்று நம் புராதன நூல்களில் கூறப்படுகின்றன" என்ற பாபு பகவான் தாஸின் வாசகம் இங்கு கவனிக்கத்தக்கது.

ஜடப் பொருளின் ஆராய்ச்சியில் அதிகமான நம்பிக்கை வைத்து, அதிலேயே வாழ்க்கை பூரணத்துவம் பெறுகிறதென்று முடிவுகட்டுகிற மேனுட்டார் கூட இந்தச் சாத்வீக எதிர்ப்பு முறையைக் கையாண்டிருக்கிருர்கள். சென்ற சில நூற்றுண்டுகளில் மேனுட்டிலும் இந்தியாவிலும் எங்கெந்தச் சந்தர்ப்பங்களில் இந்தச் சாத்வீக எதிர்ப்பு முறை அனுஷ்



தமி
N43
100174

டிக்கப்பட் டிருக்கிறதென்பதைச் சுருக்கமாக எடுத்துக் காட்டுகிறோம்.

1. ஆஸ்திரிய ஏகாதிபத்தியத்தின் கீழிருந்த ஹங்கேரியின் சுதந்திரத்திற்காகப் பாடுபட்டவன் கோஸ்ஸூத் என்ற அறிஞன் என்றுதான் எல்லோருக்கும் சர்வ சாதாரணமாகத் தெரியும். ஆனால், இவனால் ஹங்கேரிக்கு விடுதலை வாங்கிக் கொடுக்கப்படவில்லை. உண்மையில் சுதந்திரத்தை வாங்கிக் கொடுத்தவன் பிரெங்க்ஸ் டீக் (Ferencz Deak) என்பவன். இவன் ஆஸ்திரிய ஏகாதிபத்தியத்திற்கு விரோதமாகச் சாத்வீக முறையில் ஒத்துழையா இயக்கத்தை நடத்தி 1867-ஆம் வருஷம் வெற்றி பெற்றான். இவனால்தான், ஹங்கேரியின் தனி அரசியல் அமைப்பு அங்கீகரிக்கப்பட்டது.

2. பத்தொன்பதாம் நூற்றாண்டின் கடைசிக் காலத்தில் ஜெர்மனியில், பிஸ்மார்க் கொண்டுவந்த சில திட்டங்களை எதிர்த்து, முக்கியமாக இரண்டு ஒத்துழையா இயக்கங்கள் நடைபெற்றன. ஓர் இயக்கம், கத்தோலிக்க கிறிஸ்துவர்களால் நடத்தப் பெற்றது. மற்றொன்று தொழிலாளர்களால் நடத்தப் பெற்றது. இவை யிரண்டும் வெற்றிபெற்றன.

3. ருஷ்ய ஆதிக்கத்தின் கீழிருந்த பின்லாந்து வாசிகள், தங்களுடைய துன்பங்கள் சிலவற்றிற்குப் பரிகாரந் தேடிக்கொள்ளும் பொருட்டு 1901-ஆம் வருஷத்திலிருந்து 1905-ஆம் வருஷம் வரை சாத்வீக ஒத்துழையா இயக்கத்தை நடத்தி வெற்றி பெற்றார்கள்.

4. இந்த இருபதாம் நூற்றாண்டின் முதல் கால் பாகத்தில், புகையிலை உரிமையை எதிர்த்து பர்ஷியர்களும், பிரிட்டிஷ் ஆதிபத்தியத்தை எதிர்த்து எகிப்தியர்களும், அந்நியர்களுடைய பொருளாதார ஆதிக்கத்தை எதிர்த்துச் சீனர்களும் சாத்வீக முறையில் போராடியது அனைவருக்கும் நினைவிருக்கு மல்லவா?

5. 1812-ஆம் வருஷம், பாரத நாட்டின் புண்ணிய க்ஷேத்திரமாகிய காசியில், அரசாங்கத்தார் சில புதிய வரிகளை விதித்தனர். இதனை ஜனங்கள் சாத்வீக முறையில் எதிர்த்தார்கள். எல்லாக் கடைகளும் மூடப்பட்டன. ஜனங்கள் எவ்வித வேலையிலும் ஈடுபடவில்லை. தலைவர்கள் சொற்படி ஜனங்கள் நடந்தனர். இயக்கம் வெற்றிபெற்றது. அரசாங்கத்தார் வரியை ரத்து செய்தனர்.

6. 1830-ஆம் வருஷம் மைசூர் சமஸ்தானத்தில் சில அட்டூழியங்கள் நடைபெற்றன. இவைகளை அஹிம்சா முறையில் எதிர்த்து ஜனங்கள் போராடினார்கள். 'ஜனங்கள் கிராமங்களை விட்டு வெளியேறிவிட்டார்கள். நிலங்களில் யாரும் வேலை செய்யவில்லை. வரி செலுத்த மறுத்துவிட்டார்கள்.' கடைசியில் அரசாங்கம் பணிந்தது.

7. வங்காளப் பிரிவினையை எதிர்த்து 1907-ஆம் வருஷம் இந்தியாவெங்கணும் சாத்வீக முறையில் நடைபெற்ற இயக்கத்தை யாருமே அறிவர்.

இங்ஙனம் சாத்வீக எதிர்ப்பு இயக்கங்கள், பல நாடுகளில் பல காலங்களில் பலவாக நடைபெற்றிருக்

கின்றன. ஆதலின், காந்தியடிகள்தான் இந்த இயக்கத்தின் சிருஷ்டிகர்த்தர் என்று சொல்ல முடியாது. ஆனால், இந்த இயக்கத்தைப் பொறுத்தமட்டில் காந்தியடிகளின் முக்கியத்துவம் எதிலிருக்கிறதென்றால், விஸ்தீரணமான ஒரு தேசம் பூராவுக்குமாக இந்த இயக்கத்தைப் பிரயோகம் செய்து பரீட்சை பார்த்ததில் தான். குறிப்பிட்ட ஒரு பிரிவார், குறிப்பிட்ட ஒரு குறைக்குப் பரிகாரந் தேடிக்கொள்ளும் பொருட்டு இந்த முறை இதுகாறும் எங்கும் கையாளப்பட்டதே தவிர, தேசப் பொதுவில் இதனை யாரும் கையாளவில்லை. இதில் காந்தியடிகள்தான் முதன்மையானவர். அவர், இந்தப் பரீட்சையில் எவ்வளவு தூரம் வெற்றிபெற்றிருக்கிறார், இதனால் அந்நிய ஆதிக்கத்தின் பிடிப்பு எவ்வளவு தூரம் தளர்ந்திருக்கிறது, ஆயுத பலத்தையும், மனோ பலத்தையும், ஜாதிய உணர்ச்சியையும் இழந்து அடிமைப்பட்டுக் கிடக்கும் ஒரு ஜாதியாரை அஹிம்சைப் பரீட்சைக்குட்படுத்துவது சரியா, ஆத்மீக சோதனையை அரசியல் களத்திலே கொண்டுவந்து நடத்தலாமா என்பன போன்ற பிரச்னைகளில் கருத்து வேற்றுமைகளிருக்கலாம். அது வேறு விஷயம். ஆனால், வெற்றியோ தோல்வியோ, பலனோ, நிஷ்பலனோ, ஒன்றையுமே பொருட்படுத்தாமல் இந்தப் பரிசோதனையில் இறங்கிய துணிச்சல் இருக்கிறதே அது யாருக்கும் உண்டாகாது; இதுவரை யாருக்கும் உண்டாகவுமில்லை. இஃது அசாதாரணமான துணிச்சல் மட்டுமல்ல; அமானுஷ்யத் தன்மையுள்ள துணிச்சலுங்கூட. கடமையைச் செய்ய

வேண்டுமென்ற ஆவலினால் ஏற்பட்ட துணிச்சல் இது. இந்தத் துணிச்சலின் மற்றொரு பக்கந்தான் மகான் தன்மை. இந்தத் துணிச்சலுக்கும் மகான் தன்மைக்கும்தான் காந்தியடிகள் போற்றப்படுகிறாரே தவிர, அவர் அடைந்த வெற்றி தோல்விகளுக்காக வல்ல.

சாத்விக எதிர்ப்பு, ஒத்துழையாமை என்று பல பெயரிட்டு அழைக்கப்படுகிற இந்த அஹிம்ஸை இயக்கம், லட்சியத்தை அடைவதற்கான ஒரு சாதனமே தவிர, இதுவே லட்சியமல்ல. 'ஒழுங்கும் தன்னலத் தியாகமுமில்லாமல் எந்த ஒரு ஜாதியும் உண்மையான முன்னேற்றத்தையடைய முடியாதாதலால் இந்த ஒழுங்கும் தன்னலத் தியாக உணர்ச்சியும் இந்திய தேச மக்களிடையே ஏற்படவேண்டுமென்பதற்காகவே ஒத்துழையா இயக்கம் தொடங்கப்பட்டிருக்கிற'தென்று 1920-ஆம் வருஷம் செப்டம்பர் மாதம் கல்கத்தாவில் லாலா லஜபதிராயின் தலைமையில் கூடிய விசேஷ காங்கிரசில் நிறைவேற்றப்பட்ட ஒத்துழையாத் தீர்மானம் கூறுவதை இங்கு நேயர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறோம். பாரத ஜாதியானது எல்லாவகையிலும் சுபிட்சமாயிருக்கவேண்டுமென்ற உன்னத லட்சியத்தை அடைவதற்கு இந்த ஒத்துழையா இயக்கம் சரியான சாதனமா வென்பதைப்பற்றி, மேலே நாம் கூறியவாறு அபிப்பிராய பேதங்கள் இருக்கலாம். ஆனால் இந்தச் சாதனத்தைக் கையாண்டதினால் இந்தியத் தேசிய வாழ்வைப் பொறுத்தமட்டில் சில நன்மைகள் உண்

டாயிருக்கின்றன வென்பதை யாரும் மறுக்க முடியாது. இந்த நன்மைகள் காலவேகத்தை யொட்டியனவா யில்லாமலிருக்கலாம்; நாம் அடையவேண்டிய லட்சியத்தை உத்தேசிக்கையில், மிகச் சொற்பமாயிருக்கலாம். அது வேறு விஷயம். ஆனால், நன்மைகள் உண்டாயிருக்கின்றன வென்பதை நாம் ஒப்புக்கொள்ளவே வேண்டும். அவை யாவை?

1. ஒத்துழையா இயக்கம் தொடங்கிய காலத்திலிருந்து, அதாவது காந்தியடிகள் காங்கிரசின் மேலாதிக்கம் பெற்ற காலத்திலிருந்து, அரசியலில் எல்லா ஜனங்களுக்கும் ஒரு சிரத்தை ஏற்பட்டிருக்கிறது. ஆங்கில மறிந்தார்க்குமட்டும் அடைக்கலம் அளித்துவந்த இந்த அரசியலில் 'நமக்கும் உரிமையுண்டு, இதனை யறிவது நமது கடமை' யென்று, பாமர ஜனங்களென அர்த்தமில்லாமல் அழைக்கப்படுகிற சாதாரண ஜனங்கள் கருதலானார்கள்.

2. இப்படி இவர்கள் சிரத்தை எடுத்துக்கொண்டதனால் ஏற்பட்ட பகிரங்கமான பலன் என்ன வென்றால், பொதுக்கூட்டங்களில் ஆங்கில பாஷையில் பேசி, ஜனங்களின் கரகோஷத்தையும் அதிகாரிகளின் கைகுலுக்குதலையும் பெறுவதுதான் சிலாக்கியமென்றிருந்த போலி கௌரவம் போய்விட்டது. அவரவர்களுடைய தாய்மொழியில் பேசுவது நல்லதென்றும், தாய்மொழியின் மூலமாகவே ஒரு தேசத்தின் தன்மதிப்பு வளருமென்றும் ஆங்கில மறிந்த அரசியல்வாதிகள் எண்ணி அதனை அநுஷ்டானத்திற்குக் கொண்டுவந்தார்கள். பொது

வாக தேச பாஷைகளுக்கு ஒரு கௌரவம் ஏற்பட்டது.

3. இந்தியாவிலே யுள்ளவ ரனைவரும் ஒரே ஜாதியினர் என்ற உணர்ச்சி லேசாக ரேகை விட ஆரம்பித்தது.

4. ஆடம்பர வாழ்விலிருந்த மோகம் போய் எளிய வாழ்வு என்று சொல்லப்படுகிற இயற்கை வாழ்விலே ஒரு பற்றுதல் உண்டாயிற்று.

5. அன்றாட வாழ்க்கையின் தேவைகளை அந்நியப் பொருள்களைக் கொண்டு பூர்த்தி செய்வதென்ற பழக்கம் குறைந்தது. சுய-தேசத்தில் உண்டாகிற பொருள்களை உபயோகிக்க வேண்டுமென்ற எண்ணம் ஏற்பட்டது. இதனால் சுதேசத் தொழில் முயற்சிகள் பல தொடங்கப்பட்டன.

6. தமக்கென்று ஒரு நாகரிக பரம்பரை உண்டு என்பதை, அடிமைத்தனத்தின் காரணமாக அடியோடு மறந்திருந்த இந்தியர்கள், அப்பொழுதிருந்து அந்தப் பரம்பரையைப் பற்றிச் சிறிது சிந்திக்கத் தலைப்பட்டார்கள்.

7. ஆளப்படும் நாட்டைப்பற்றி அதுகாறும் அசட்டை மனப்பான்மை கொண்டிருந்த ஆளும் சாதியினர், இப்பொழுது அதன் அரசியல் துடிப்புகளை அறிந்துகொள்ள ஆவல்கொண்டார்கள்.

8. இந்திய மகாஜனங்க ளிடத்தில் குடிகொண்டிருந்த அச்சம் விலகத் தலைப்பட்டது. அதன் ஸ்தானத்தில் அஞ்சாமை குடிகொள்ள ஆரம்பித்தது.

இவற்றில் சிரேஷ்டமானவை இரண்டு. ஒன்று பாரத ஜாதிக்கு அதன் நாகரிக பரம்பரையை உணர்த்தியது; மற்ருென்று, இந்திய மகாஜனங்களுக்கு அளித்த அஞ்சாமை யென்னும் ஆயுதம். காந்தியடிகளின் மகத்தான இந்த இரண்டு நன்கொடைகளுக்காகவுமே அவரை நாம் என்றும் நன்றியுடன் போற்றவேண்டும்.

எப்படி அன்பும் துன்பமும் இணைபிரியாச் சகோதரர்களோ அதைப்போல் அடிமைத்தனமும் கோழைத்தனமும் இணைபிரியாச் சகோதரர்கள். எதனுல் எது ஏற்பட்டது, அதாவது அடிமைத்தனத்தினுல் கோழைத்தனம் ஏற்பட்டதா, அல்லது கோழைத்தனத்தினுல் அடிமைத்தனம் ஏற்பட்டதாவென்பதை நாம் பாகுபடுத்திக் கூறமுடியாது. ஒன்ருெழிந்தால் மற்ருென்ருெழியும்; ஒன்றிருந்தால் மற்ருென்றிருக்கும். அவ்வளவுதான் நமக்குத் தெரியும். இவ்விரண்டும் ஒரு ஜாதியை, பனிபோல் மூடிக்கொண்டுவிட்டால், அந்த ஜாதி இருக்கிற இடமே தெரிவதில்லை. அஃது இருந்தும் இல்லாமலேயே இருக்கிறது. இதனுலேயே நமது பெரியோர்கள் அஞ்சாமையைப் பற்றி அதிகமாக வற்புறுத்திப் பேசியிருக்கிருர்கள்.

> 'அஞ்சாமை யல்லாற் றுணை வேண்டா வெஞ்சாமை
> யெண்ணி யிடத்தாற் செயின்'

என்ற வள்ளுவர் வாக்கு முதல் "அச்சமில்லை; அச்சமில்லை" யென்ற பாரதியாரின் வாசகம் வரையில், எந்த மகா புருஷர்களுடைய திருவாக்குகளைப் பரிசிலனை செய்து பார்த்தோமாலும்

அவற்றிற்கு அடிப்படையில் அஞ்சாமை யென்ற ரேகை ஒளிவிட்டுக்கொண் டிருக்கிறதைக் காண் கிறோம். அஞ்சாமை என்கிற ஆயுதத்தைத் தரித் துக்கொண் டிருந்ததினால்தான், திருநாவுக்கரசர், "நாமார்க்கும் குடியல்லோம்; நமனை யஞ்சோம்; நரகத்தி லிடர்ப்படோம்; நடலையில்லோம்; ஏமாப் போம்; பிணியறியோம்; பணிவோமல்லோம்; இன்பமே என்னாளுந் துன்பமில்லை" என்று வீறு கொண்டு பேசினார். அஞ்சாமை யுடையவர்கள் தான் மனிதத் தன்மையில் சுலபமாக வளர்ச்சி பெறக்கூடும். இந்தியர்கள், மனிதர்களாக மதிக்கப்படுவதில்லை யென்று சொன்னால், அதற்கு அவர்களிடத்திலே குடிகொண் டிருக்கிற அச்சந்தான் காரணம். சுவாமி விவேகானந்தர் ஓரிடத்தில் கதறுகிறார்: "நான் மனிதர்களை உற்பத்தி செய்ய வேண்டியது அவசியமா யிருக்கிறது. ஏனென்றால், இந்தியாவில் ஸ்திரீகளும் பேடிகளுந்தான் இருக்கிறார்க ளென்பது எனக்குத் தெரியும்." விவேகானந்தர் செய்துகொண்ட இந்தச் சங்கல்பத்தை காந்தியடிகள் செயலில் கொண்டு வந்து காட்டி யிருக்கிறார்.

காந்தியடிகளை ஒரு வீரன் என்று முதலில் குறிப் பிட்டோம். வீரமென்பது புறத் தோற்றத்திலே இல்லை. சீலத்திற்கும் சாந்தத்திற்கும் இடங்கொடுத்து அவைகளைப் பத்திரமாகக் காப்பாற்றி வருகிற எந்தத் திண்ணிய நெஞ்சமுண்டோ அந்த நெஞ்சத்திலே தான் வீரத்திற்கு இடமுண்டு. காந்தியடிகள் இத் தகைய நெஞ்சுடையவர். ஆனால், இந்த நெஞ்சத்தி

லிருந்து, இமயம் போன்ற உறுதியான இந்த இருதயத்திலிருந்து, கருணையானது சதா பிரவாகமெடுத்து ஓடிக்கொண்டிருக்கிறது. இதனால் தான் அவருடைய அரசியல் விரோதிகளும் அவரைக் கண்டு அஞ்சவும் அஞ்சுகிறார்கள்; அதே சமயத்தில் பக்தியும் செலுத்துகிறார்கள். ஜான் குந்தர் (John Gunther) என்ற பிரசித்த பிரயாண நூலாசிரியன், காந்தியடிகளைப் பின்வருமாறு மதிப்பிடுகிறான்:

> "காந்தியடிகளின் வாழ்க்கை முழுவதும் வீர வாழ்க்கையாகவே இருக்கிறது......அவர் விதியை எதிர்த்துப் போராடினார். அது மட்டுமல்ல, அந்த விதியைக் காட்டிலும் வலிவுள்ள பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தையே எதிர்த்துப் போராடினார்."

காந்தியடிகளிடத்தில் அஞ்சாமை குடிகொண்டிருக்கிறதென்று சொன்னால், அதற்குக் காரணம் என்ன? இதனைச் சிறிது சுருக்கமாக இங்கு எடுத்துக் காட்ட விழைகிறோம். யாரொருவர், தமக்கென்று ஒன்றையும் வைத்துக் கொள்ளாமல், எல்லாம் பிறருக்காகவே என்று வாழ்க்கையை நடத்துகிறாரோ அவர், யாருக்கும் அச்சப்பட வேண்டியதில்லை. உலகத்திற்கு எவனொருவன் அடிமைபட்டுக் கிடக்கிறானோ அவன்தான் அஞ்சி அஞ்சி வாழ்க்கையை நடத்துகிறான். உலகத்தை எவனொருவன் அடிமைப்படுத்திக் கொள்கிறானோ, அவன் யாருக்கும் அஞ்சவேண்டுவதில்லை. உலகத்திலே தோன்றிய ஒவ்வொரு ஜீவராசியும் ஏதோ ஒரு விதமான அச்சத்துடன்தான் வாழ்கின்றது; அதனால் துன்

பத்தையும் அடைகிறது. ஸர் எட்வின் ஆர்னல்ட் (Sir Edwin Arnold) என்ற ஆங்கில அறிஞன் தனது 'ஆசிய ஜோதி' என்ற நூலில், இதை மிக அழகுபடக் கூறியிருக்கிறான். துறவுத் தத்துவத்தின் ரகசியமே இதுதான். அதாவது, எவனொருவன், தனக்கு, தனக்கு என்று எல்லாவற்றையும் இறுக்கிப் பிடித்துக்கொண்டு எல்லாரையும் ஆளப் பார்க்கிறானோ அவன் எல்லாவற்றையும் இழந்து எல்லாருக்கும் அடிமையாகி விடுகிறான். அதே பிரகாரம் எவனொருவன், தன்னுடைய சர்வத்தையும் பிறருடைய நலனுக்காக அர்ப்பணஞ் செய்கிறானோ அவன் சர்வத்தையும் அடைகிறான்; சர்வமான பேருக்கும் எஜமானனாகிறான். அப்படித் தன்னுடைய தியாகத்தினால் எஜமான பதவியை அடைகிறவன், யாருக்கு அஞ்ச வேண்டும்? அஞ்ச வேண்டிய அவசியமே அவனுக்கு இல்லையே. அஞ்சவும் அவனுக்குத் தெரியாதே. அச்சமில்லாத விடத்தில் அன்பு குடிகொள்வது இயற்கையல்லவா? இதனாலேயே அஞ்சாமையும் அன்பும் ஒரே மரத்திலிருந்து பிரிகிற இரண்டு கிளைகள் என்று அறிஞர்கள் கூறுகின்றனர். அந்த மரம் யாது? அதுதான் துறவு. துறவு என்று சொன்னால், தன்னையே இழந்து விடுவது என்று அர்த்தமல்ல. தன்னுடையதென்று சொல்லி எதனைதன்மீது பற்று வைத்துக் கொண்டிருக்கிறோமோ அந்தப் பற்றைத் துறந்து விடுவது என்பதுதான் அர்த்தம். அந்தத் துறவானது மனிதத் தன்மையிலே வளர்ந்து சேவையாகப் பரிணமிக்க வேண்டும். தன்மீது வைத்திருக்கும் பற்றைத்

துறக்கிறவன் பிறர்மீது காதல் கொள்கிறான். இந்தக் காதலுக்கு பிரேமை என்று பெயர். எனவே, துறவு, அஞ்சாமை, அன்பு, சேவை என்பன ஒன்றையொன்று பிணைத்துக்கொண் டிருக்கும் சங்கிலிமாதிரி ஒன்றை யொன்று தொடர்கிறது. பர்த்ருஹரி என்ற வட மொழிப் புலவன், தனது 'வைராக்கிய சதகம்' என்ற நூலில், துறவையும் அஞ்சாமையையும் எப் படிப் பொருத்தப்படுத்திக் கூறுகிறான் பாருங்கள்:

> "செல்வத்திலே வறுமை பயம், அறிவிலே அறியாமை பயம், அழகிலே வயோதிகம் என்ற பயம், புகழிலே புறங் கூறுகிறவர்களைப் பற்றின பயம், வெற்றியிலே பொறாமை என்கிற பயம், தேகாபிமானத்திலே மரண பயம், இப்படி உல கத்திலுள்ள எல்லாவற்றிலும் பயம் குடிகொண் டிருக்கிறது. எவனொருவன் எல்லாவற்றையும் தியாகஞ் செய்து விடுகிறானோ அவன்தான் பயப் படாதவன்."

இத்தகைய அஞ்சாமை காந்தியடிகளிடத்தில் நிரம்பி யிருக்கிறது. இதனாலேயே, அஹிம்சை என் பது அவருக்குச் சர்வ சாதாரணமான ஓர் ஆயுதமா யிருக்கிறது.

உத்தம வீரர்களுடைய லட்சணம் என்னவென் றால், 'அவர்கள் ஆபத்துக்குப் புறமுதுகு காட்ட மாட்டார்கள்; ஆனால் ஒரு கொசுவினிடத்திலும் இரக்கங் காட்டுவார்கள்.' அவர்கள் 'ராட்சத பல முடையவர்கள்; அந்தப் பலத்தைத் தமது நலத்திற் காக உபயோகிக்கவே மாட்டார்கள்.' அவர்களுடைய ஒவ்வொரு செயலிலும் மனிதத்தன்மை குடிகொண்

டிருக்கிறது. 'சுமார் ஒரு தலைமுறைக்கு முன்னர் காந்தியடிகளுக்கு எதிரியா யிருந்த' தளபதி ஸ்மட்ஸ், (General Smuts) "அவருடைய (அதாவது காந்தியடிகளுடைய) எந்தக் காரியத்திலும் ஒருவித மனிதத் தன்மை குடிகொண்டிருந்ததையே இங்கு வற்புறுத்திக் கூற விரும்புகிறேன். அவர் தென்னப்பிரிக்காவில் சிறையிலிருந்த போழ்து என்னுடைய உபயோகத்திற்கென்று ஒரு ஜதை மிதியடிகளைத் தயாரித்து, விடுதலையானவுடன் எனக்குச் சன்மானமாக அளித்தார்!" என்று பாராட்டிச் சொல்லி யிருப்பதை இங்கு வாசகர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறோம்.

காந்தியடிகளின் ஒவ்வொரு செயலிலும் மனிதத் தன்மை ஒளிவிட்டு வீசுவதாலேயே அவரை ஒரு மனிதர் என்று அழைக்கிறோம். வெளிப்பார்வைக்கு அவர் எல்லோரையும் போல் ஒரு சாதாரண மனிதராகவே காணப்படுகிறார். எல்லா மகான்களும், எல்லா வீரர்களும், எல்லாத் தியாகிகளும் இப்படித்தான் காணப்படுகிறார்கள். ஆனால், அவர்கள் உள்ளமானது, எவ்வித சஞ்சலத்திற்கும் இடங்கொடாமல் சாந்தமாக இருக்கிறது. ரோமெய்ன் ரோலந்து, (Romain Rolland) காந்தியடிகளைப் பற்றிக் கூறும் ஒரு வாக்கியம் இங்குக் கூர்ந்து நோக்கத் தக்கது:

> "அவருடைய அறிவு, அமைதியாகவும் தெளிவாகவும் இருக்கிறது. அவருடைய இருதயம், தான் என்ற அகங்கார மில்லாமல் இருக்கிறது. மற்றெல்லா மனிதர்களைப் போல அவரும் ஒரு மனிதரே."



TAMIL NADU ARCHIVES LIBRARY No. 100174 MADRAS-600 008
44623

காந்தி யார்?

மகா புருஷராகவும், வீரராகவும், மனிதராகவும முக்கோணத்திலிருந்துநமக்குக் காட்சியளிக்கிற காந்தியடிகள் இன்று எழுபத்து மூன்ருவது வயதையடைந்திருக்கிருர். அவருடைய வயது முதுமையாகிக்கொண்டு போகிறது; ஆனல், அவருடைய வாழ்வு இளமையாகிக் கொண்டு வருகிறது. வயதாக ஆக, வாழ்க்கையைச் சுருக்கிக்கொள்ள வேண்டுமென்று சொல்வார்கள். ஆனல், அவருடைய வாழ்க்கை, வயதாக ஆக விரிந்துகொண்டு போகிறது. அவர் ஒரு ஞானி போலிருக்கிருர். ஆனல், உலகமெல்லாம் அவருக்குக் குடும்பமா யிருக்கிறது. அவர், பொன்னும் பொருளும் வேண்டுமென்று பிச்சை கேட்கிருர். ஏன்? இந்தியாவிலுள்ள கோடிக்கணக்கான ஏழை மக்கள் கையேந்திப் பிச்சை கேட்காமலிருக்கும் பொருட்டு. அவர் அடிக்கடி உபவாசம் இருக்கிருர். ஏன்? லட்சக்கணக்கானவர்களுடைய நிரந்தர உபவாசத்தைத் தடுப்பதற்காக. அவர் ஒற்றை ஆடை அணிந்துகொண் டிருக்கிருர். ஏன்? மற்றவர்களுக்கு முழு ஆடை வழங்குவதற்காக. அவர் ஊன்றுகோலுடன் நடக்கிருர். ஏன்? மற்றவர்களுக்குத் தாம் ஓர் ஊன்றுகோலா யிருக்க வேண்டுமென்ற ஆவலினல். அவர், கோடிக்கணக்கான மக்களால் வணங்கப்படுகிருர். ஆனல், அவர் சத்தியமாகிற ஒரே பொருளைத்தான் வணங்குகிருர். அவருடைய லட்சியத்திலே, அதாவது பாரத ஜாதியின் மகோன்னத வாழ்விலே நமது பார்வையைத் திருப்பி, அந்த நல்வாழ்வுக்காக நமது வாழ்வை அர்ப்பணம் செய்வதன் மூலம் அவரை வணங்குவோமாக.

15017/4

தமிழ்ப் பண்ணையின் அடுத்த மலர் :

# "அவளும் அவனும்"

[காவியம்]

★

தேசியக்கவி


நாமக்கல் வெ. ராமலிங்கம் பிள்ளை அவர்கள்

எழுதியது

★


தமிழ்ப் பண்ணை

தியாகராயநகர் — சென்னை



வெளிவந்து விட்டது

# கார்ல் மார்க்ஸ்
(ஜீவிய சரித்திரம்)

★

வெ. சாமிநாத சர்மா
எழுதியது

விலை ரூபா

**3—0—0**

(தபாற் செலவு தனி)

இந்நூலில், மார்க்ஸின் இளமைப் பருவம், பத்திரிகாசிரியனாயிருந்து அவன் பட்ட கஷ்டங்கள், அவன் வகுத்த சமதர்ம சித்தாந்தத்தின் விளக்கம் முதலிய பல புதிய அரிய விஷயங்கள் அடங்கியிருக்கின்றன

சக்தி காரியாலயம், வடக்கு வெளி வீதி, மதுரை